www.Padasalai.Net www.CBSEtips.in

Ts6T

# தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
## தொகுத்தறி தேர்வு - டிசம்பர் 2022

-----

## வகுப்பு 6

காலம்: 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................
   அ) இடம்+மெல்லாம் ஆ) இடம்+எல்லாம்
   இ) இட+எல்லாம் ஈ) இட+மெல்லாம்
2) மானம்+இல்லா என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................
   அ) மானம் இல்லா ஆ) மானமில்லா
   இ) மானமல்லா ஈ) மானம்மில்லா
3) உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் ................
   அ) மறைந்த ஆ) நிறைந்த இ) குறைந்த ஈ) தோன்றிய
4) போர்க்களத்தில் வெளிப்படுத்தும் குணம் ................
   அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை
5) பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது ................ ஆகும்.
   அ) வம்பு ஆ) அமைதி இ) அடக்கம் ஈ) பொறை

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5×1=5

6) காமராசரைக் 'கல்விக்கண் திறந்தவர்' என்று மனதாரப் பாராட்டியவர் ................
7) பழையன கழிதலும் ................ புகுதலும்.
8) வீட்டுப் பயன்பாட்டிற்காக பொருளை வாங்குபவர் ................
9) அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைந்துள்ள ஊர் ................
10) முக்கனி என்பது மா, பலா ................

**இ) பொருத்துக:** 5×1=5

11) விடிவெள்ளி - பஞ்சுமெத்தை
12) மணல் - ஊஞ்சல்
13) புயல் - போர்வை
14) பனிமூட்டம் - வீடு
15) கட்டுமரம் - விளக்கு

**ஈ) ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி:** 4×2=8

16) எதை நம்பி வாழக்கூடாது?
17) காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?
18) தாலாட்டுப் பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?
19) உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?
20) ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும்?
21) நான்கு நிலங்கள் என்பன யாவை?

**உ) அடிபிறழாமல் எழுதுக:** 4+2=6

22) 'மன்னனும்' - எனத் தொடங்கும் மூதுரைப் பாடல்.
23) 'மோப்பக்குழையும்' - எனத் தொடங்கும் குறள்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஊ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:** **2×2=4**

24) இன எழுத்துகள் என்றால் என்ன?

25) மயங்கொலி எழுத்துகள் யாவை?

26) சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?

**எ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** **3×3=9**

27) காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.

28) ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

29) தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?

30) பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருட்கள் யாவை?

31) பொங்கல் விழாவின்போது உங்கள் ஊரில் என்னென்ன சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள்?

**ஏ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க:** **2×5=10**

32) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

**(அல்லது)**

33) மாமல்லபுரம் எப்படி உருவானது? அதற்கு காரணமான நிகழ்வை எழுதுக.

34) 'பொங்கல் திருநாள்' - என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

**(அல்லது)**

35) பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதுக.

**ஐ) கீழ்க்காணும் அனைத்து மொழிப்பயிற்சி வினாக்களுக்கும் விடையளிக்க:** **4×2=8**

36) **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு தமிழ் கலைச்சொல் எழுதுக:**

அ) E-mail ஆ) Welcome

37) **பின்வரும் சொற்களை சரியான இன எழுத்துக்களைப் பயன்படுத்தி திருத்தி எழுதுக:**

அ) தெண்றல் = ..................

ஆ) கன்டம் = ..................

இ) நன்ரி = ..................

ஈ) மன்டபம் = ..................

சிவக்குமார். மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மேநிப
இலஞ்சி - 627809
தென்காசி மாவட்டம்.

38) **பின்வரும் நவமணிகளை அகர வரிசைப்படுத்தி எழுதுக:**

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புஷ்பராகம், மரகதம்.

39) **அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்க இடத்தில் சேர்த்து எழுதுங்கள்:**

அ) நீங்கள் வரும்போது எனக்கு புத்தகம் வாங்கி வாருங்கள். (ஒரு)

ஆ) நாம் உரங்கள் தயாரித்து உழவர்களுக்கு வழங்க வேண்டும். (இயற்கை)

----------

www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com